

ஈரோடு மாநகரத்திற்குட்பட்ட சங்கு நகர் எஸ்.பி.எஸ். மஹால் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்து சீர்வரிசைகள் வழங்கினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி. செல்வராஜ், மண்டல தலைவர் சசிகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் நவமணி, ஈரோடு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பிரகாஷ், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலர் பூங்கோதை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட விளையாட்டு அலுவலக வளாக மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்து விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ, மாவட்ட ஆட்சியர் சி. பழனி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , ஒன்றியச் செயலாளர்கள் தே. முருகவேல். ஆர். முருகன், ஆர். பி. முருகன், ஒன்றிய குழுத் தலைவர் இ.சச்சிதானந்தம், நிர்வாக பணியாளர் முன்னேற்றச் சங்கம் வாலிபால் மணி நகர பொருளாளர் என். என். இளங்கோ, மாவட்ட அணி அமைப்பாளர்கள் தொழிலாளர் அணி பாலு கார்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி ப. அன்பரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி அரசு மரியாதை!

# உடல் உறுப்பு தானம் செய்த த.வடிவேல் உடலுக்கு மலரஞ்சலி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் செலுத்தினார்!

தேனி, செப். 28 -

தேனி மாவட்டம் உடல் உறுப்பு தானம் செய்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் த.வடிவேல் உடலுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த த.வடிவேல் அவர்கள் கடந்த 23.09.2023 அன்று பணி முடிந்து வீடு திரும்பும் வழியில் சீலையம்பட்டி, சப்பாணி அம்மன் கோயில் என்ற இடத்தில் இருசக்கர வாகனத்திலிருந்து நிலை தடுமாறி கீழே விழுந்ததில் தலையில் பலத்த காயமுற்று சின்னமனூர் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்னர் கூடுதல் சிகிச்சைக்காக மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 24.09.2023 அன்று சிகிச்சை பலனின்றி மூளைச்சாவு ஏற்பட்டதாக மருத்துவமனை நிருவாகத்தால் அறிவிக்கப்பட்டது.

மூளைச்சாவு அடைந்த த.வடிவேல் அவர்களின் மனைவி மற்றும் குடும்பத்தினர் அன்னாரின் உடல் உறுப்புகளைதானம் செய்வதாக தெரிவித்தார்கள். அதன்படி, நேற்று அன்னாரின் உடல் உறுப்புகளான சிறுநீரகம், கல்லீரல், கண்கருவிழி, தோல் ஆகியவை மதுரை அப்பல்லோ மருத்துவமனை மற்றும் ராஜாஜி மருத்துவமனையில் உடல் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக காத்திருந்தவர்களுக்கு தானமாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உடல் உறுப்புகளை தானம் செய்பவர்களின் உடலுக்கு மதிப்பளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்படும் என அறிவித்தார்கள்.

அந்த வகையில் மூளைச்சாவு அடைந்து உயிரிழந்த த.வடிவேல் அவர்களின் உடலுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (26.09.2023) சின்னமனூர் பகுதியில் உள்ள அன்னாரின் வீட்டிற்கு நேரடியாக சென்று தமிழ்நாடு அரசின் சார்பில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர், அவருடைய குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.ராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீண் உமேஷ் டோங்கரே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன். மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஜெயபாரதி, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) ரவிச்சந்திரன், உத்தமபாளையம் வட்டாட்சியர் சந்திரசேகர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,செப், 28-

அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட் அரியலூர் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் நேற்றைய தினம் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப வரதராஜன்பேட்டை தென்னூரிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து வழித் தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மேலும், இந்த அரசுப் பேருந்து தடம் எண் 171P, 171D தென்னூர் சென்னை வழிதடத்தில் வரதராஜன்பேட்டை, ஆண்டிமடம், விருத்தாசலம் ஆகிய பகுதிகளை தொட்டு இயக்கப்படும். இப்பேருந்து காலை 8.30 மணிக்கு தென்னூரில் இருந்து புறப்பட்டு மாலை 3.15 மணிக்கு சென்னையை சென்றடையும். இதேபோன்று மாலை 4.30 மணிக்கு தென்னூரில் இருந்து புறப்பட்டு இரவு 11.00 மணிக்கு சென்னையை சென்றடையும் வகையில் 2 அரசுப் பேருந்துகள் மூலம் தினசரி 2 நடைகள் இயக்கம் செய்யப்படுகிறது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்கள், வியாபாரிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் மிகுந்த பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கோட்டாட்சியர் பரிமளம், ஒன்றிய கழக செயலாளர்கள் ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மண்டல தலைவர் சேகர், தொ.மு.ச. தலைவர் கொளஞ்சி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கை நாட்டினர் தொடர்ந்து தாக்குதல்!

# தடுக்காமல் மெத்தனப் போக்கை கையாளுகிறது ஒன்றிய அரசு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, செப். 28 -

தமிழ்நாடு மீனவர்கள் மீது தொடர்ந்து இலங்கை நாட்டினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதன் மீது நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மெத்தனப் போக்கை கையாண்டு வருகிறது ஒன்றிய அரசு என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 26.09.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:



தினகரன்

செப்டம்பர் 26, 2023 செவ்வாய்க்கிழமை

நிரந்தர தீர்வு தேவை

இந்தியாவில் குஜராத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது நீளமான கடலோர பகுதி தமிழ்நாடு ஆகும். 11 லட்சம் மீனவர்கள் மீன்பிடி தொழிலை நம்பி உள்ளனர். இந்தியாவின் மொத்த மீன்பிடிப்பு 10 முதல் 12 சதவீதம் தமிழ்நாட்டில் தான். ஆனால் ஒவ்வொரு மீனவர்களும் கடலுக்கு சென்று மீன் பிடித்து கொண்டு ஊர் திரும்புவது சில நேரங்களில் நிச்சயமற்ற நிலை ஏற்படுகிறது. ஒரு பக்கம் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினராலும், இலங்கை கடற்கொள்ளையராலும் மற்றும் இலங்கை மீனவர் கும்பலாலும் தாக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது. இதனால் தமிழக மீனவர்கள் தங்கள் படகுகள், மீன்பிடி உபகரணங்களை இழப்பதுடன் சில நேரங்களில் அவர்களால்

இந்தியாவில் குஜராத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது நீளமான கடலோர பகுதி தமிழ்நாடு ஆகும். 11 லட்சம் மீனவர்கள் மீன்பிடி தொழிலை நம்பி உள்ளனர். இந்தியாவின் மொத்த மீன்பிடிப்பு 10 முதல் 12 சதவீதம் தமிழ்நாட்டில் தான். ஆனால் ஒவ்வொரு மீனவர் களும் கடலுக்கு சென்று மீன் பிடித்து கொண்டு ஊர் திரும்புவது சில நேரங்களில் நிச்சயமற்ற நிலை ஏற்படுகிறது. ஒருபக்கம் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினராலும், இலங்கை கடற்கொள்ளையராலும் மற்றும் இலங்கை மீனவர் கும்பலாலும் தாக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது. இதனால் தமிழக மீனவர்கள் தங்கள் படகுகள், மீன்பிடி உபகரணங்களை இழப்பதுடன் சில நேரங்களில் அவர்களால் கடுமையாக தாக்கப்பட்டு மீன்பிடி தொழிலுக்கு செல்ல முடியாத நிலையும் ஏற்படுகிறது.

தமிழக மீனவர்களின் மீன்பிடி படகை சூழ்ந்துகொண்டு, அப்பாவி தமிழக மீனவர்களை இரும்புக்கம்பி, கட்டை, சுத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கிவிட்டு அவர்களது மீன்கள், வாக்கிடாக்கி, ஜி.பி.எஸ். கருவி, பேட்டரி ஆகியவற்றை பறித்து கொண்டு செல்வது தொடர்கதையாக நீள்கிறது. தமிழக மீனவர்களை தாக்குவதை இலங்கை அரசு வழக்கமாக கொண்டுள்ளது. தமிழக மீனவர்கள் நிம்மதியாக மீன்பிடிக்க முடியவில்லை. கைது, தாக்குதல், சித்ரவதை தொடரத்தான் செய்கிறது. காங்கிரஸ் ஆட்சிக்கு பிறகு மத்தியில் 2014ல் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. பாஜக ஆட்சி அமைந்த பிறகுதான் அடக்குமுறைகள் இன்னும் அதிகமாகியிருக்கிறது.

மீனவர்கள் கைது, தாக்குதல், சிறைச்சாலை என்பதை தாண்டி, மீனவர்களின் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான படகுகள் அந்த படகுகளை இலங்கை அரசு பறித்து செல்வது அதிகமாகியிருக்கிறது. மீனவர்களை விடுவித்தாலும் படகுகளை தருவதில்லை. மீனவர்களுக்கு வாழ்வாதாரமே படகும் வலையும்தான். படகுகளை உடைப்பதும், வலைகளை அறுப்பதும் இலங்கை அரசின் வழக்கமாக உள்ளது. இலங்கை மீனவர் கும்பல், இலங்கை கடற்கொள்ளையர் தாக்குதல் தவிர்த்து 2020ம் ஆண்டு முதல் இன்று வரை தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் 49 தாக்குதல் சம்பவங்களை நடத்தியுள்ளனர். இதில் தமிழக மீனவர்கள் 619 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 83 மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

604 மீனவர்களையும், 24 படகுகளையும் இலங்கை அரசு விடுவித்திருக்கிறது. விலையுயர்ந்த மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்து கொண்டு திரும்பி கொடுக்காததால் அவர்களது வாழ்வாதாரம் முற்றிலும் நாசமாக்கும் வேலையில் இலங்கை அரசு இறங்கி உள்ளது. மீனவர்கள் மீது தாக்குதல், கைது சம்பவங்கள் நடக்கும்போதெல்லாம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதுகிறார். அதில் ஒன்றிய அரசு இலங்கை நாட்டினரால் நடத்தப்படும் இத்தகைய தாக்குதல் சம்பவங்களை தடுக்கவும், தாக்குதல் நடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இலங்கை அரசுக்கு வலியுறுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறார்.

ஆனால் ஒன்றிய அரசு கண்டுக்கொள்ளாமல் மெத்தனப் போக்கை கையாண்டு வருகிறது. ஒன்றிய அரசு மனம் மாறி, பிரச்சினையை தீர்க்க இரு நாட்டின் கடற்படை ராணுவ மாநாடு நடத்த வேண்டும். அப்போது இரு நாட்டு கடற்படை ராணுவ வீரர்கள் அவர்களது கடல் எல்லையில் ரோந்து பணியை மேற்கொள்ள வேண்டும். எல்லை தவறி செல்லும் மீனவர்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே தற்போதைய நிலைக்கு நிரந்தர தீர்வாகும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தஞ்சை பொன்.தருமராஜன்

செப்டம்பர் 28 (1989)



கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தஞ்சை நகரத்தில் வட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து போட்டியிட்டவரிடம் பணியாற்றி வந்த இவர், தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு, கலைஞர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

தஞ்சை நாட்டு செக்கு தொழிலாளர் சங்க தலைவராகவும், மாவட்ட சினிமா ஆபரேட்டர்கள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


### செஞ்சி தொகுதி மேல்மலையனூர் ஒன்றியத்தில்

# புதிய பள்ளிக் கட்டிடங்கள் திறப்பு விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி செப்28-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ,மயிலம், திண்டிவனம், ஆகிய தொகுதிகளில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பள்ளி கட்டிடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சிவாயிலாக திறந்து வைத்தார்.

இதை அடுத்து செஞ்சி தொகுதிமேல்மலையனூர் ஒன்றியம் மேல்மலையனூர் தொரப்பாடி வேட்டைக்காரன் பட்டி ஆகிய ஊராட்சிகளில் முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட புதிய பள்ளி கட்டிட வகுப்பறையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு தொடங்கி வைத்து வகுப்பறையில் வரையப்பட்ட ஓவியங்களை பார்வையிட்டார். தொடர்ந்துபள்ளி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அவர் இனிப்புகளை வழங்கினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

கிராமத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசுதான் தி.மு.க. அரசுஅந்த வகையில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மகன் தளபதி மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் கிராமங்கள் தன் நிறைவு பெறும் வகையில் கிராம சாலைகள் திட்டம்,பள்ளி கட்டிடங்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள்கட்டப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குழந்தைகளுக்கு பாதுகாப்புக்கான பள்ளி கட்டிடங்கள் கட்டப்பட்டு முதலமைச்சர் காணொளி வாயிலாக திறந்து வைத்துள்ளார்.

கிராமத்தில் படிக்கும்குழந்தைகளுக்கு காலை உணவு திட்டத்தை ஏற்படுத்தி ஒரு தாய்க்கு தாயாக முதலமைச்சர் செயல்பட்டு வருகிறார் .

பெண் பிள்ளைகள் படித்தால் தான் கிராமத்தின் வளர்ச்சி சமுதாயத்தின் வளர்ச்சி என்றும் இதற்காகத்தான் புதுமைப்பெண் திட்டத்தை முதலமைச்சர் அறிவித்து மேல்படிப்பு படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் ,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் செல்வகுமார்வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குலோத்துங்கன், சரவணகுமார், ஒன்றிய பொறியாளர் நாராயணசாமி ஒன்றிய கவுன்சிலர்கள் கலா நாராயணமூர்த்தி, ராஜா, பெருமாள்,ரவிச்சந்திரன்,ஜெயலட்சுமி தக்ஷிணாமூர்த்தி, வட்டார கல்வி அலுவலர்கள் பிரகாஷ், வெங்கடேசன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயச்சந்திரன், வட்டார மேற்பார்வையாளர் ஜமுனா, ஊராட்சி மன்ற தலைவர்கள் வெங்கடேசன், முனியம்மாள்துரைமுருகன், விஜயலட்சுமி ஜெயக்குமார், , நிர்வாகிகள் உதயகுமார்,சரவணன், ரகுராமன், தாஹிரா,எஸ்.பி.சம்பத், ஜி.பி.எஸ். முருகன், ராம சரவணன், தோப்பு சம்பத்,வெங்கடேசன், இளைஞரணி மணிகண்டன், மாணவரணி ஆறுமுகம்,விவசாய அணி பழனி,மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட் அரியலூர் கிளை சார்பில் தென்னூரிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து வழித்தடத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.